## கேள்வி:

# "இரட்சிக்கப்பட நாம் ஆவியினாலே நடத்தப்பட வேண்டுமென்றால், இந்நாட்களில் நாம் எவ்விதம் பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப்படக் கூடும்?"

## பதில்:

*பரிசுத்த ஆவியானவர்மேல் உள்ள ஆர்வத்தின் மறுமலர்ச்சி சமீபத்திய வருஷங்களில் வந்ததினால், ஆவிக்குரிய இயக்கம் உண்டாயிற்று. இதில் ஈடுபடுவோர் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் தாங்கள் அந்நிய பாஷை களில் பேசமுடியும் என்று காண்பிப்பதே இவ்வியக்கத்தின் முதன்மை நோக்கமாயுள்ளது. அவர்கள் அதைச் செய்கின் றார்களா? இல்லையா? என்பது ஒரு முக்கியமான கேள்வியாய் உள்ளது. ஆனால் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி இதைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் பெற்ற வேறொரு கேள்வி உண்டு: நமது இரட்சிப்பில் பரிசுத்த ஆவியானவரின் பங்கு என்ன?*

*நாம் இரட்சிக்கப்படுவதற்குப் பரிசுத்த ஆவியானவர் சிலவற்றைச் செய்ய வேண்டியுள்ளது. நாம் ஆவியானவரால் புதுப்பிறப்பை அடைகிறோம் (யோவா. 3:5); நாம் ஆவியான வருக்குள் நீதிமான்களாக்கப்படுகின்றோம் (1 கொரி. 6:11); நாம் ஆவியானவரின் புதிதாக்குதலினால் இரட்சிக்கப்படுகிறோம் (தீத்து 3:5). இன்றைய நாளில் நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், நீங்கள் ஆவியானவரால்தான் இரட்சிக்கப் பட வேண்டும்.*

*பரிசுத்த ஆவியானவர் எவ்விதம் இரட்சிக்கின்றார்? இதற்குரிய பதில் ரோமர் 8:14ல் காணப்படுகிறது: "மேலும்*

எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.” ஆவியான வரால் இரட்சிக்கப்படுவதற்கு நீங்கள் ஆவியானவரால் நடத்தப்பட வேண்டுமென்று நான் உறுதியாய்க் கூறுகின்றேன்! இப்பொழுதுதான் இக்கேள்வி வருகிறது: “இரட்சிக்கப்பட நாம் ஆவியினால் நடத்தப்பட வேண்டுமென்றால், இந்நாட்களில் நாம் எவ்விதம் பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப்படக் கூடும்?” இதற்கு விடையளிக்க நாம், முதலாவது, பரிசுத்த ஆவியானவர் நம்மை எவ்விதம் வழி நடத்துகிறார் என்றும் இரண்டாவது, பரிசுத்த ஆவியானவர் நம்மை எங்கு வழி நடத்துகிறார் என்றும் கேட்போம்.

## பரிசுத்த ஆவியானவர் நம்மை எவ்விதம் வழி நடத்துகிறார்?

பரிசுத்த ஆவியானவர் நம்மை எவ்விதம் வழி நடத்துகிறார்? குறைந்த பட்சம் மூன்று சாத்தியக் கூறுகள் இதற்குத் தரப்பட முடியும்:

**ஒரு அற்புதத்தின் வழியாகவா?**

பரிசுத்த ஆவியானவர் நேரடியாக மற்றும் அற்புத விதமாக நம்மை இரட்சிப்புக்குள் வழி நடத்துகின்றாரா? அவர் இரவின் அமைதியில் நம்முடன் பேசுகின்றாரா? அவர் விசேஷித்த வெளிப்பாடுகளை நமக்குத் தருகின்றாரா? இந்நாட்களில் ஜனங்களை தூதர்கள் வந்து சந்திக்கின்றார்களா? தேவன் “ஒரு சிறிய, ஆழ்ந்த குரலில்” பேசுகின்றாரா?

கடந்த காலங்களில் தேவன் இவ்விதமாய் ஜனங்களை வழி நடத்தினார் என்பது தெளிவாய் தெரிகிறது. ஆனால் இது ஒன்று மட்டுமே, இந்நாட்களிலும் அவர் அதே வழியில் ஜனங்களை வழி நடத்திக் கொண்டிருக்கிறார் என்று நிரூபிக்க மாட்டாது. ஏன்? ஏனென்றால், தேவன் வெவ்வேறு யுகங்களில் ஜனங்களிடம் வெவ்வேறு வகையில் செயலாற்றியுள்ளார். அவர் வெவ்வேறு வழிகளில் ஜனங்களிடம் பேசியிருக்கிறார் (எபி. 1:1, 2). மேலும், கடந்த காலங்களில் செய்ததையே தேவன் மறுபடியும் செய்து கொண்டிருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, உலகத்தை சிருஷ்டித்தல், அவரது குமாரனை அனுப்புதல் அல்லது வேதாகமத்தில் அவரது ஏவுதல் போன்றவற்றை அவர்

மறுபடியும் மறுபடியும் செய்து கொண்டிருக்கவில்லை. இவ்வாறாக, "தேவன் என்ன செய்திருக்கிறார்?" என்பதோ "தேவன் என்ன செய்யக் கூடும்" என்பதோ கேள்வியாக இல்லாமல், "இன்றைய நாட்களில் தேவன் என்ன செய்கிறார்?" என்பதே கேள்வியாய் உள்ளது.

அற்புத வரங்களின் காலம் முடிவடைந்ததாக வேதாகமத்தில் போதிக்கப்படுவதால், தேவன் இந்நாட்களில் ஜனங்களை நேரடியாகவோ அல்லது அற்புதமாகவோ நடத்துவதோ அல்லது வழி நடத்துவதோ இல்லையென்று ஆலோசிக்கின்றோம். அற்புதங்களின் காலம் முடிந்து விட்டது என்று நான் ஏன் சொல்லுகின்றேன்? ஏனென்றால், ஆவியானவரால் ஏவப்பட்டு, பவுல் அதை முதலில் கூறியுள்ளார்! அவர், பரிசுத்த ஆவியானவரின் வரங்களைப்பற்றி 1 கொரிந்தியர் 12ல் பேசினார். பின்பு 1 கொரிந்தியர் 13ல், "நிறைவானது வரும் போது" இந்த அற்புதங்களின் வரம் ஒழிந்து போகும் என்று கூறினார் (1 கொரி. 13:8-10). இது உண்மையில் நடந்தது என்று நான் நம்புகின்றேன். அந்நிய பாஷை பேசுதல், குணமாக்கும் வல்லமை, அறிவை உணர்த்தும் வரம் ஆகியவை உட்பட பரிசுத்த ஆவியின் அற்புத வரங்கள் யாவும் நிறைவுற்று விட்டன. இந்நாட்களில் அவைகளுக்கு அவசியமில்லை. அப்போஸ்தலர்களின் வசனங்களை உறுதிப்படுத்துவதற்காகவே அவை தரப்பட்டன (மாற்கு 16:17-20; எபி. 2:2-4), ஆனால் அவ்வசனங்கள் இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இன்றைக்கு அவைகளுக்கு நிரூபணம் தேவையில்லை, புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் நடந்ததுபோல, இன்றைய நாட்களில் மக்கள் குணப்படுத்தப்படுவதில்லை (எடுத்துக் காட்டாக, அப். 3ல் காணப்படும் அற்புதத்தையும், இன்றைய நாட்களில் "அற்புதம்" என்பதாகச் சொல்லப்படுபவைகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள்). தேவனுடைய வெளிப்படுத்துதல் நிறைவேறியபோது சபையானது பக்குவம் பெற்றது, இது அற்புதங்களின் காலம் முடிவடைந்ததைக் குறித்தது. அற்புதவரங்கள் நிறைவேறி முடிந்து விட்டதால், பரிசுத்த ஆவியானவரால் அற்புதமாகவோ அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட தன்மையிலோ வழி நடத்துதலைப் பெறுவோம் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது.

ஒருவேளை பரிசுத்த ஆவியானவர் நேரடியாகவோ அல்லது அற்புதமாகவோ மக்களிடம் கிரியை செய்வதாயிருப்பினும்,

அக்கிரியைகளின் மூலம் அவர் மக்களை இரட்சிப்பார் என்பதற்கு எவ்வித அடையாளமும் இல்லை! புதிய ஏற்பாட்டில், பொதுவாக பரிசுத்த ஆவியானவரின் அற்புதமான வழிகாட்டுதல்கள் யாவும் ஏற்கனவே கிறிஸ்துவின் சீஷர்களாயிருந்தவர்களுக்குத்தான் கிடைத்தனவேயன்றி, கிறிஸ்துவின் சரீரத்துக்குப் புறம்பே இருந்தவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்களும் கூட - எடுத்துக்காட்டாக ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள் கூட - எல்லா சமயங்களிலும் இவ்வித வழிகாட்டுதலைப் பெறும் வாய்ப்பைப் பெற்றிருக்கவில்லை. பவுலும், பர்னபாவும் தங்கள் இரண்டாவது சுவிசேஷப் பிரயாணத்தில் யோவான் மாற்குவை அழைத்துச் செல்வதா இல்லையா என்று விவாதம் செய்துள்ளனர். இச்சம்பவத்தில் யார் சரியானதைப் பேசினார் என்பதைக் கர்த்தர் வெளிப்படுத்தவில்லை என்பது போல தெரிகிறது.

கர்த்தர் தனிநபர் ஒருவருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கச் சித்தமாகும்போது, எப்பொழுதுமே அவர் மனித செய்தியாளர் ஒருவர் மூலமாகவே சுவிசேஷ செய்தியை அறிவிக்கப் பண்ணியுள்ளார் என்பதை புதிய ஏற்பாடு தெளிவாய்க் காட்டுகிறது. அவர் பிலிப்புவை எத்தியோப்பிய மந்திரியிடமும் (அப். 8), பேதுருவை கொர்னேலியுவிடமும் (அப். 10) அனுப்பினார். இவ்விருவரையும் அவர் நேரடியாகவோ மற்றும் அற்புத வழி காட்டுதலினாலேயோ இரட்சிக்கவில்லை.

பரிசுத்த ஆவியின் வழி காட்டுதலினால் நீங்கள் இரட்சிக்கப்பட விரும்பினால், பரிசுத்த ஆவியானவர் அற்புதமாய் உங்களுக்குக் காட்சியளிப்பார் என்று எதிர்பார்க்காதீர்கள். மாறாக, கொர்னேலியு செய்தது போலவே நீங்களும் செய்யுங்கள்: இரட்சிப்படைவது எப்படி என்று உங்களுக்குக் கூறக்கூடிய ஒரு செய்தியாளரைத் தேடுங்கள் (அப். 11:14).

**வசனத்தை விசேஷமாய் வெளிச்சமாக்குவதினாலேயா?**

இரண்டாவதாக, ஆவியானவர் வசனத்தை விசேஷமாய் வெளிச்சமாக்குவதினால் நம்மை வழி நடத்துகிறாரா என்று நாம் கேட்கக்கூடும். இரட்சிக்கப்படுவதற்கு ஆவியானவரிடமிருந்து விசேஷித்த வெளிப்பாடுகள் தேவையில்லை என்றாலும், வேதாகமத்தைப் புரிந்துகொள்வதற்கு அவருடைய விசேஷித்த ஒளியூட்டல் தேவை என்று சிலர் நம்புகின்றனர். இது உண்மையா?

ஒவ்வொருவரும் ஜெபத்தோடும், புரிந்துகொள்ள தேவ உதவியை நாடியும் வேதாகமத்தைப் படித்துக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். (உதாரணத்திற்கு, யாக். 1:5ஐக் காணவும்.) ஆனால் நாம் இதைக்காட்டிலும் சற்று மிஞ்சினதைப் பற்றி இங்கு பேசுகிறோம். அதாவது, ஆவியானவர் நேரடியாக ஒரு ஒளியூட்டுதலை வழங்குகிறார் என்றும், இது இல்லாமல் ஒருவர் வேதாகமத்தைப் புரிந்துகொள்ள முடியாது என்றும், இவ்வொளியூட்டுதல் வரும்போது, ஒரே கணத்தில் எல்லாவற்றையும் விளக்கப்பண்ணுகிறாரென்றும் கூறுகின்றனர். இவ்வகை ஒளியூட்டுதல்தான் தேவைப்படுகிறதா?

இல்லை, ஏன் என்றால், நாம் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு புத்தகத்தைப் பரிசுத்த ஆவியானவர் ஏற்கனவே நமக்குத் தந்துள்ளார். வேதாகமத்திலேயே கூட, அது படித்துப் புரிந்து கொள்வதற்கானது என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. பவுல், "அதை நீங்கள் வாசிக்கையில், கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்து கொள்ள லாம்" என்று கூறினார் (எபே. 3:4). பவுல் தாம் எழுதியதை எபேசியர்கள் புரிந்து கொள்ளும்படியாக எதிர்பார்த்தார். அவர்கள் அதைப் புரிந்து கொள்வதற்காக அற்புதமான உதவியோ, அல்லது தெய்வீக ஒளியூட்டுதலோ தேவையென்று அவர் எதிர்பார்க்கவில்லை, வேதாகமத்தை வாசிக்கையில், சிலவற்றைப் புரிந்து கொள்வது கடினம் என்று (எல்லா விஷயங்களையுமோ அல்லது பலவற்றையோ அல்ல. 2 பேது. 3:15ff.) நாம் கண்டறிந்தாலும், வேதாகமத்தின் பெரும்பங்கு நாம் புரிந்துகொள்ள எளிதாகவேயுள்ளது.

ஒருவேளை, வேதாகமத்தைப் புரிந்துகொள்ள பரிசுத்த ஆவியானவரின் விசேஷ ஒளியூட்டுதல் தேவையென்று வைத்துக் கொள்வோம். அப்படியானால், பரிசுத்த ஆவியானவர் தமது சொந்த வார்த்தைகளையே நமக்கு விளக்கிக் கூற வேண்டியதாகும். ஏனென்றால், பரிசுத்த ஆவியானவர் முதலாவதாக நமக்கு வேதாகமத்தைக் கொடுத்துள்ளார் (2 தீமோ. 3:16, 17; 2 பேது. 1:20, 21). இரட்சிக்கப்பட நமக்குத் தேவையானது இருமுறை ஏவப்பட்ட செய்தியாகிவிடும்! தேவ ஆவியினால் ஏவப்பட்டு வேதாகமத்தை முதலாவதாகக் கொடுத்த பின்பு, அதைப் புரிந்து கொள்வதற்காக அதை வாசிப்பவர்களுக்கு மறுபடியும் ஏவுதலைத் தரவேண்டிய அளவுக்கு அவர் அவ்வளவு சாதாரணக் கிரியை செய்திருந்தார்

*என்பதை நம்பத்தக்க காரணமுண்டா?*

*அப்போஸ்தலர்களின் வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கு முதலாம் நூற்றாண்டில் எவ்வித விசேஷித்த ஒளியூட்டுதலும் தேவைப்பட்டிருக்கவில்லை. பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு ஜனங்களிடம் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறும்படி கூறியபோது அவர்கள் அதை நன்றாகவே புரிந்து கொண்டார்கள் (அப். 2:38 ff.). இது புரிந்து கொள்வது அல்லது புரிந்துகொள்ள தவறுவது பற்றிய விஷயமல்ல; இது செய்தியை ஏற்றுக்கொள்வது அல்லது மறுப்பது பற்றிய விஷயமாக இருந்தது. இன்றும் இதுவே பிரச்சனை! செய்தியானது புரிந்து கொள்ளக் கூடியதாகவே இருக்கிறது. ஆனால் சில ஜனங்கள் அதை மறுப்பதையே தேர்வு செய்கின்றனர்.*

*ஆவியானவரின் விசேஷ ஒளியூட்டுதலைத் தேடுவதாய் ஜனங்கள் கூறிக்கொள்ளும்போது, அவர்கள் வேதாகமத்தைப் புரிந்துகொள்ள உதவியைப் பெறுவதில் உண்மையில் ஆர்வம் காட்டுவதில்லை என்பது தெளிவாகும். மாறாக, அவர்கள் ஏற்கனவே நம்புகின்றவைகளை நியாயப்படுத்துவதற்குச் சிலவற்றைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றனர். இப்படியாக, அவர்கள், "கர்த்தரே, நான் ஏற்கனவே நம்புவதைப் புரிந்துகொள்ள உதவும்" என்று ஜெபிக்கின்றவர்களாயிருக்கின்றனர்!*

*எனவே பரிசுத்த ஆவியானவரின் விசேஷித்த ஒளியூட்டுதல் உங்களுக்குத் தேவையல்ல. வேதவசனங்களின் தெளிவான விளக்கங்களைப் புரிந்துகொண்டு, ஏற்றுக்கொண்டு, விசுவாசித்து அவைகளுக்குக் கீழ்படிய வேண்டியதே அவசியமாகும்.*

***தேவனுடைய வசனத்தினாலா?***

*அற்புதமாகவோ அல்லது வசனத்தின்பால் விசேஷித்த ஒளியூட்டுதல் மூலமாகவோ அல்ல, மாறாக, வேதாகமம் என்ற தேவனுடைய வார்த்தையின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் நம்மை இரட்சிப்புக்கு வழி நடத்துகிறார்.*

*அப்போஸ்தலர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தைக் கவனியுங்கள்: "அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாத படியினாலே பாவத்தைக் குறித்தும் ..." (யோவா. 16:8, 9). இரட்சிக்கப்படுவதற்கு, பாவம், நீதி மற்றும் நியாயத்தீர்ப்பு*

ஆகியவற்றைப் பற்றி நாம் உணர்த்தப்பட வேண்டியது தேவை! ஆனால் பரிசுத்த ஆவியானவர் புதிய ஏற்பாட்டின் ஆரம்ப காலத்தில் மக்களுக்குப் பாவத்தைப்பற்றி எவ்விதம் உணர்த்தினார்? அப். 2ல் இயேசுவே கர்த்தரும் கிறிஸ்துவுமாயிருக்கிறார் என்று பேதுரு பிரசங்கித்ததைப் படிக்கிறோம். அதன் விளைவு என்ன? அங்கே பாவத்தைப்பற்றிய உணர்த்துதல் உண்டாயிற்று: இதை அவர்கள் கேட்ட பொழுது இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து, “சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்” என்றார்கள் (அப். 2:37). பரிசுத்த ஆவியானவர் ஏவிய வார்த்தைகளைப் பிரசங்கித்ததாலேயே உணர்த்துதல் உண்டாயிற்று! “... தேவவசனமாகிய ஆவியின் பட்டயம் ...” (எபி. 6:17) என்று பவுல் சொல்லுவதில் வியப்பேதுமில்லை. ஆவியானவர், தேவவசனமாகிய தம்முடைய பட்டயத்தை, பிளப்பதற்கும், உணர்த்துவதற்கும், நம்பச் செய்வதற்கும் அதன்மூலம் ஜனங்களை இரட்சிப்புக்கு வழி நடத்துவதற்கும் பயன்படுத்துகிறார்.

நாம் இரட்சிக்கப்படுவதற்கு நீரினாலும், ஆவியினாலும் பிறக்கின்றோம் அல்லது பிறக்க வேண்டும் என்று வேதாகமம் கூறுகின்றது. எனவே நாம் ஆவியினால் பிறக்கின்றோம் (யோவா. 3:5, 9). ஆனால் நாம் வசனத்தின் மூலமாக மறுபடியும் பிறந்துள்ளதாகவும் வேதாகமம் போதிக்கின்றது: “அழிவுள்ள வித்தினாலேயல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும், ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே” (1 பேது. 1:23).

மேலும், நாம் ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்பட்டிருப்பதாகவும் வேதாகமம் கூறுகின்றது: “... கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்” (1 கொரி. 6:11). வசனத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டதாக இது நமக்குப் போதிக்கிறது. இயேசு, “உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்” என்றார் (யோவா. 17:17).

நாம் ஆவியினால் இரட்சிக்கப்பட்டதாக வேதாகமம் போதிக்கின்றது: “நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய

புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்'' (தீத்து 3:5). மேலும் வேதாகமத்தில், நாம் வசனத்தினால், இரட்சிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது: "... உங்கள் உள்ளத்தில் நாட்டப் பட்டதாயும், உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமை யுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள்" (யாக். 1:21).

எனவே, *பரிசுத்த ஆவியானவர் நம்மை இரட்சிப்புக்கு வழி நடத்துவதற்குச் செய்கின்ற எல்லாவற்றையும் அவர் வசனத்தின் மூலமாகவே செய்கின்றார்* என்று நாம் உறுதியாய்க் கூறலாம்! நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் இரட்சிக்கப்பட விரும்புகின் றீர்களா? ஆவியானவரால் வழி நடத்தப்படுங்கள். நீங்கள் ஆவியானவரால் வழி நடத்தப்பட விரும்பினால், பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட வசனத்தின்படி வழி நடத்தப்பட வேண்டும்.

## பரிசுத்த ஆவியானவர் நம்மை எங்கு வழி நடத்துகிறார்?

பரிசுத்த ஆவியானவர் நம்மை எங்கு வழி நடத்துகிறார்? அவர் தேவனுடைய வசனத்தை ஏவியிருக்கின்றார். அவர் அவ்வசனத்தின் மூலமாகவே நம்மை வழி நடத்துகிறார். ஆனால் பரிசுத்த ஆவியானவர் நாம் என்ன செய்ய வேண்டும் என்று கூறுகிறார்? இதற்குப் பதில்காண, உங்கள் புதிய ஏற்பாட்டை எடுத்துப் படியுங்கள்.

### கிறிஸ்துவில் ஒரு விசுவாசம்

முதலாவது, அவர் உங்களைக் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் கொள்ளும்படி வழி நடத்துகிறார். தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் வரும்போது அவர் தம்மைக் குறித்து சாட்சி கொடுப்பார் என்று இயேசு கூறினார் (யோவா. 15:26). மேலும் அவர் இயேசுவை மகிமைப்படுத்துவார் (யோவா. 16:14). வேதவாக்கியங்கள் தேவ ஆவியினால் அருளப் பட்டிருப்பதாக நாம் கற்றுள்ளோம் (2 தீமோ. 3:16, 17). எனவே இது விசுவாசத்தை உண்டாக்குகிறது: "ஆதலால் விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினால் வரும்" (ரோமர் 10:17). பெந்தெகொஸ்தே நாளன்று, பேதுரு செய்த முதல் பிரசங்கத்தின் விளைவு விசுவாசமே (அப். 2).

அவர் தமது செய்தியைக் கேட்டவர்களை இயேசுவே கிறிஸ்து என்று நம்ப வைத்தார். அதன் பிறகு அந்த விசுவாசிகள் "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கதறினார்கள் (அப். 2:36, 37).

**பாவத்தைப்பற்றிய ஒரு உணர்வு**

இரண்டாவதாக, பரிசுத்த ஆவியானவர் உங்களை, பாவத்தைப்பற்றிய ஒரு உணர்வுக்கு வழி நடத்துகிறார். பெந்தெகொஸ்தே நாள் அன்று இதுதான் நடந்தது (அப். 2). இயேசுவின்மேல் விசுவாசம் கொண்ட மக்கள் "இருதயங்களில் குத்தப்பட்டவர்களானார்கள்." அவர்கள் பாவத்தைப்பற்றிய குற்றத்தை உணர்ந்தார்கள். யாரோ ஒரு பாவமுள்ள, தேவதூஷணம் கூறிய நபரையல்ல மாறாக, தேவனுடைய குமாரனாகிய மேசியாவையே சிலுவையில் அறைந்துவிட்ட பாவத்தைத் தாங்கள் செய்ததைப் புரிந்து கொண்டனர். அவர்கள் குற்றவுணர்வு அடைந்திருக்க வேண்டும்! ஆனால் அவர்கள் மட்டுமல்ல, நாமும் கூட சிலுவையில் கிறிஸ்துவை அறைந்ததற்கு குற்றமுள்ளவர்களாயிருந்தோம்; அவர்களுடையது போலவே நம்முடைய பாவங்களுக்காகவும் அவர் மரித்தார். நாம் பாவத்தைக் குறித்து உணர்வடைய வேண்டும்! நாம் பாவத்தைக் குறித்து உணர்வடையவில்லையென்றால், வசனத்தைக் கேட்க மறுப்பவர்களாயிருப்போம்!

**மனந்திரும்புதல்**

மூன்றாவதாக, புதிய ஏற்பாட்டை நீங்கள் படிக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் உங்களை மனந்திரும்புதலுக்கு வழி நடத்துவதைக் கண்டுபிடிப்பீர்கள். மக்கள் விசுவாசித்து, பாவங்கள்பற்றிய உணர்வடைந்தபோது, மனந்திரும்பும்படி (அப். 2:38) பேதுரு அவர்களை கேட்டுக் கொண்டார். இந்த மனந்திரும்புதல் என்பது, பாவத்தைக் குறித்த உணர்வல்ல; மாறாக அந்த உணர்வின் விளைவு ஆகும். இனிப் பாவம் செய்வதில்லை என்று முடிவெடுத்தலே மனந்திரும்புதலாகும். இதுவே இன்றைய நாட்களில் எல்லா மக்களுக்குமான தேவனுடைய செய்தியாயிருக்கிறது: "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் அவர் கட்டளையிடுகிறார்" (அப்.17:30). எல்லாரும் மனந்

*திரும்பவேண்டும் என்பதால், அதுவும், இச்செய்தி பரிசுத்த ஆவியானவரிடமிருந்து நேரடியாக வந்துள்ளதால்: நீங்கள் மனந்திரும்ப வேண்டும்!*

***பாவ மன்னிப்பிற்கான முழுகுதல்***

*புதிய ஏற்பாட்டை படிக்கையில், நீங்கள் அடுத்தபடியாக பரிசுத்த ஆவியானவர் பாவ மன்னிப்பிற்கான முழுகுதலுக்கு - பாவமன்னிப்பிற்கான தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு - உங்களை வழி நடத்துவதைக் காண்பீர்கள். இம்முழுகுதல் எப்பொழுதுமே பரிசுத்த ஆவியானவருடன் இணைந்துள்ளதாயிருக்கிறது. யோவா. 3:5ல் நாம் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்க வேண்டும் என்று இயேசு கூறியதை நினைவு வையுங்கள். "ஆவி" என்பது நிச்சயமாகவே பரிசுத்த ஆவியானவர்தான்; ஜலம் என்பது ஞானஸ்நானம் பெறுகின்ற தண்ணீர் ஆகும். ஆக, ஆவியினால் ஒருவர் மறுபடி பிறக்க வேண்டுமானால், தண்ணீரில் ஞானஸ்நானம் பெற வேண்டும். பெந்தெகொஸ்தே நாளன்று, பரிசுத்த ஆவியானவர் கூறும்படி கொடுத்த வார்த்தைகளை பேதுரு பிரசங்கித்தார். அவர்கள் இரட்சிக்கப் படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று பேதுரு பரிசுத்த ஆவியின் வல்லமையினால் கூறினார்? ''மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்'' (அப். 2:38). பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் மக்களை ஞானஸ்நானம் பெறும்படியாக வழி நடத்தினார். அதேபோன்று, அப்போஸ தலருடைய நடபடிகள் நூலில் கிறிஸ்தவர்களாய் ஆன பலரும் கூட பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானத்தில்தான் வழி நடத்தப்பட்டனர். மனமாற்றம் பற்றிய ஒவ்வொரு சம்பவத்திலும் மக்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதாக நடபடிகள் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்று பரிசுத்த ஆவியானவர், மக்களை ஞானஸ்நானம் பெறும்படி வழி நடத்தியிருப்பாரேயானால், இன்று உங்களையும் அதே செயலைச் செய்யும்படியே ஆவியானவர் தூண்டுகிறவரா யிருக்கிறார்: பாவமன்னிப்புக்கான ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்!*

***கிறிஸ்துவின் சபை***

*ஐந்தாவதாக, பரிசுத்த ஆவியானவர் உங்களைக்*

*கிறிஸ்துவின் சபைக்குள் வழி நடத்துகிறார் என்பதைப் புதிய ஏற்பாட்டைப் படிக்கையில் கற்றுக் கொள்வீர்கள். இது பெந்தெகொஸ்தே நாளின் விளைவாக இருந்தது. பரிசுத்த ஆவியானவரின் செய்தியை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றவர்கள் அதைப் பிரசங்கித்தவர்களுடன் ''சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" (அப். 2:41). அப். 2:47ல், இரட்சிக்கப் படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் என்று நாம் வாசிக்கின்றோம் (*KJV*). இவ்விடத்தில் "சபை" என்ற வார்த்தை மூல பாஷை நூலில் இல்லையென்றாலும் அந்தக் கருத்து அங்கு வருகின்றது. அது முதல், சபையானது இருந்து வருகிறது, ஞானஸ்நானம் பெறுகின்ற யாவரும் அதற்குள் சேர்க்கப்படுகின்றனர், பவுல் இதைப்பற்றி 1 கொரி. 12:13ல் "... எல்லாரும் ஒரே ஆவியி னாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப் பட்டு'' என்று குறிப்பிடுகிறார். சபை என்பது சரீரமாகும் (எபே. 1:22, 23). அது எவ்வித சரீரம் அல்லது சபையாக உள்ளது? அது ஒரே சபையாகும் (எபே. 4:5). அது மனிதரால் உண்டாக்கப்பட்ட சபையல்ல; அது கிறிஸ்துவின் சபையாகும் (மத். 16:18). பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்படி பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்படுகையில் நீங்கள் அந்த ஆவியானவராலேயே கர்த்தருடைய சபைக் குள்ளும் வழி நடத்தப்படுகிறீர்கள். அந்த சபையில் பரிசுத்த ஆவியானவரால் அருளப்பட்ட மற்ற ஆசீர்வாதங்களும், நீங்கள் ஆற்றவேண்டிய மற்ற சில பொறுப்புள்ள பணிகளும் உங்களுக்கு உள்ளது. உங்கள் வாழ்நாள் முழுவதும் உண்மை யாய் ஆராதிக்கும், ஊழியம் செய்யும் பொறுப்பு உங்களுக் குள்ளது. ஆனால் இங்கு நீங்கள் இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டத்திலிருக்கிறீர்கள் என்பது உறுதியாவதோடு, தேவனு டைய கிருபையினால், நீங்கள் தொடர்ந்து அவருடைய வசனத்தால் வழி நடத்தப்பட்டால், பரலோகத்தில் உங்களுக்கு ஒரு இல்லம் இருப்பது நிச்சயமாகும்.*

*இவ்விடத்தில் சிலர், ''ஆவியானவர் மேல்கூறியவற்றி லிருந்து வித்தியாசப்பட்ட வேறு வகையில் என்னை வழி நடத்தியுள்ளார்'' என்று மறுப்புத் தெரிவிக்கக்கூடும். ஒருவேளை இரட்சிக்கப்படுவதற்கு அவர் உங்களுக்கு வேறு விதமான வழியைக் காட்டியுள்ளார் என்றோ வித்தியாசப் பட்ட சரீரம் அல்லது சபை அல்லது நாமகரணக் கூட்டத்தில்*

*வழி நடத்தினார் என்றோ நீங்கள் விசுவாசித்துக் கொண்டிருக்கலாம்.*

*ஒரு ஆவி உங்களை வேறு வழியில் நடத்தினது என்று நீங்கள் கூறுவது சரியாகக் கூட இருக்கலாம். ஆனால் கேள்வி இதுதான்: உங்களை வழி நடத்தியது தேவ ஆவியானவரா? வேதாகமம் கூறுவதை நினைவில் வையுங்கள்: "பிரியமான வர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றி யிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறி யுங்கள்" (1 யோவா. 4:1). உலகத்தில் பொய்யின் ஆவிகளும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் உள்ளனர்.*

*நீங்கள் ஒரு கள்ளத்தீர்க்கதரிசியினால் அல்லது பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்பட்டீர்களா இல்லையா என்பதை உங்களால் எப்படி அறிய முடியும்? உங்களை வழி நடத்தியவர்கள், புதிய ஏற்பாட்டின் ஆரம்ப காலத்தில் ஆவியானவர் மக்களை வழி நடத்தின அதே செயல்களைச் செய்யும்படி உங்களுக்குப் போதித்தார்களா இல்லையா என்பதை வைத்தே அதை நீங்கள் அறிய முடியும்! வேறு எந்த வாதத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டாலும் மறுத்தாலும், பின்வரும் உண்மையை நீங்கள் மறுக்காமல் ஏற்றுக் கொண்டே யாக வேண்டும்: மேற் கூறிய ஐந்து செயல்களுக்கும் குறைவா னதைச் செய்யும்படியோ அல்லது இவற்றிலிருந்து வித்தியாச மானதைச் செய்யும்படியோ நீங்கள் வழி நடத்தப்பட் டிருந்தால், நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப் படவில்லை!*

## முடிவுரை

*நீங்கள் ஆவியானவரால் வழி நடத்தப்படுவீர்களா? ஒரு வேளை அவர் மனித உருவில் இங்கிருந்தால், இம்முக்கிய விஷயங்களைப் பற்றி வேதாகமம் போதிக்கின்றவைகளுக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ அவர் ஒன்றும் உங்களிடத்தில் கூறமாட்டார். அவரது செய்தி உங்களிடத்திற்கு அப்படியே தரப்பட்டுள்ளது. இதை நீங்கள் கேட்பீர்களா? இதற்கு நீங்கள் கீழ்ப்படிவீர்களா?*